# அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
# Ang Mo Kio Tamil Methodist Church

## *11 பிப்ரவரி 2024 ஞாயிறு ஆராதனை*
*11 February 2024 Sunday Service*
## ***Discipleship & Nurture Sunday***

✝ **ஆராதனைக்கு அழைப்பு** — **திருமதி. ஹென்சி மெல்பின்**
Call to Worship — Mrs. Hency Melbin

**இறைவணக்கப்பாடல்** — **பாடகர் குழு**
Introit — Choir

**ஜெபம்** — **திருமதி. ஹென்சி மெல்பின்**
Prayer — Mrs. Hency Melbin

✝ **தொடக்க பாடல்** — **சபையார் இணைந்து**
Opening Song — Congregation

### நல்ல செய்தி, இயேசுவை

1. நல்ல செய்தி, இயேசுவை
நோக்கிப்பார், ரட்சிப்பார்
நம்பி வந்த அவரை
நோக்கிப்பார், ரட்சிப்பார்
எந்தப்பாவியாயினும்
தள்ளமாட்டேன் என்கிறார்
துரோகஞ் செய்தபோதிலும்
நோக்கிப்பார், ரட்சிப்பார்.

2. எங்கும் செய்தி சொல்லுவோம்
நோக்கிப்பார், ரட்சிப்பார்
தேசா தேசம் கூறுவோம்
நோக்கிப்பார், ரட்சிப்பார்
எந்த நாடு தீவிலும்
இயேசு காத்து நிற்கிறார்
மூடன் நீசன் ஆகிலும்
நோக்கிப்பார், ரட்சிப்பார்

3. இன்னும் கேள், மா நேசராம்
இயேசுவே காக்கிறார்
நம்பும் பக்தரையெல்லாம்
காக்கிறார், காக்கிறார்
சற்றும் தவறாமலும்
கையில் ஏந்திக்கொள்ளுவார்
கேடுபாடில்லாமலும்
காக்கிறார், காக்கிறார்.

4. சுவிசேஷம் இதுவே
காக்கிறார், காக்கிறார்
பாவம் நீக்கிப் பின்னுமே
காக்கிறார், காக்கிறார்
மோட்சஞ் சேருமளவும்
தாங்கிக்கொண்டே இருப்பார்
தீமையைச் செய்யாமலும்
காக்கிறார், காக்கிறார்.

✝ **மாறி வாசித்தல் 6ம் ஞாயிறு**
**தேவ ஆராதனை புத்தகம் 22**
*"சங்கீதம் 22"* — **சபையார் இணைந்து** Congregation

"என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?"

Psalter Reading –Page 22 "Psalm 22"

✝ **தந்தை போற்றி** — **சபையார் இணைந்து**
Gloria Patri — Congregation

**துதி ஆராதனை**
Singspiration

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Thanksgiving & Pastoral Prayer — Rev. Vijay Joseph

**பரமண்டல ஜெபம்** — **சபையார் இணைந்து**
Lord's Prayer — Congregation

✝ **காணிக்கை பாடல்** — **சபையார் இணைந்து**
Offertory Song — Congregation

### விசுவாசியின் காதில் பட

விசுவாசியின் காதில் பட, யேசுவென்ற நாமம்
விருப்பாயவர் செவியில் தொனி இனிப்பாகுது பாசம்.

1. பசித்த ஆத்துமாவைப் பசியாற்று மன்னாவதுவே
முசிப்பாறுதல் இளைத்தோர்க்கெல்லாம் முற்றும் அந்தபெயரே.

2. துயரையது நீக்கிக் காயமாற்றிக் குணப்படுத்தும்:
பயங்கள் யாவும் யேசுவென்றால் பறந்தோடியே போகும்.

3. காயப்பட்ட இருதயத்தைக் கழுவிச் சுத்தப்படுத்தும்,
மாயைகொண்ட நெஞ்சையது மயக்கமின்றி விடுக்கும்.

4. எல்லை இல்லாக் கிருபைத்திரள் ஏற்றுநிறைந்திருக்கும்,
எல்லா நாளும் மாறாச்செல்வம் யேசுவென்ற பெயரே.

5. என்னாண்டவா, என் ஜீவனே, என் மார்க்கமே முடிவே
என்னால் வருந்துதியை நீரே ஏற்றுக்கொள்ளும், தேவே.

✝ **பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
Doxology — Congregation

✝ ***திருமறைப் பாடம்***
***எரேமியா 31 : 31 - 34***
Scripture Reading :
Jeremiah 31:31-34

***திருமதி. தெரஸ் தேன்மொழி***
Mrs. Therese Thenmozhi

***அருளுரை***
Sermon

***மறைதிரு. ஜேம்ஸ் நகுலன்***
Rev. James Nagulan

✝ ***அர்ப்பணகீதம்***
Offertory & Closing Song

***சபையார் இணைந்து***
Congregation

<u>தேன் இனிமையிலும் ஏசுவின் நாமம்</u>

தேன் இனிமையிலும் ஏசுவின் நாமம்
திவ்விய மதுரமாமே - அதைத்
தேடியே நாடி ஓடியே வருவாய், தினமும் நீ மனமே.

1. காசினிதனிலே நேசமதாகக்
கஷ்டத்தை உத்தரித்தே,
பாவக் கசடதை அறுத்துச் சாபத்தைத் தொலைத்தார்!
கண்டுணர், நீ மனமே.

2. பாவியை மீட்கத்
தாவியே உயிரைத் தாமே ஈந்தவராம் -
பின்னும் நேமியாம் கருணை நிலைவரமுண்டு
நிதம் துதி, என் மனமே.

3. காலையில் பனிபோல்
மாயமாய் உலகம் உபாயமாய் நீங்கிவிடும் -
என்றும் கர்த்தரின் பாதம் நிச்சயம் நம்பு
கருத்தாய், நீ மனமே,

4. துன்பத்தில் இன்பம் தொல்லையில் நல்ல
துணைவராம் நேசரிடம் -
நீயும் அன்பதாய்ச் சேர்ந்தால் அணைத்துனைக் காப்பார்
ஆசை கொள், நீ மனமே.

5. பூலோகத்தாரும் மேலோகத்தாரும்
புகழ்ந்து போற்றும் நாமம், -
அதைப் பூண்டுகொண் டால்தான் பொன்னகர் வாழ்வில்
புகுவாய் நீ மனமே.

***அறிவிப்புகள்***
Announcements

✝ மனப்பாட வசனங்கள்
Weekly Memory Verses
***எரேமியா 31 : 33***
Jeremiah 31 : 33

***சபையார் இணைந்து***
Congregation

***33. அந்நாட்களுக்குப்பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்***
Closing Prayer & Benediction

***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Rev. Vijay Joseph

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ Indicates Congregation standing